குறிப்பிட்டார்கள். அது நிர்வாகச் சீர்கேடு அல்ல. -ரியாக்ஷன் ஆப் தி மெடிசின்'—அதைப் போக்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது.

வட்ட மருத்துவமனைகளில் பல் சிகிச்சைப் பிரிவுகள்.

*வினா எண். 36—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட்ட அளவில் இயங்கும் மருத்துவமனைகளில் பல் நோய்ப் பிரிவுகள் துவக்கும் செயற் குறிப்புகள் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தற்போது உள்ள 108 வட்ட மருத்துவமனைகளில், 66 வட்ட மருத்துவ மனைகளில் பல் நோய் மருத்துவப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

திரு. யா. சை. மு. யூசுப்: பல் நோய் வேறு பல நோய் களுக்குக் காரணமாக இருப்பதால் பல் மருத்துவ பிரிவு இல்லாத இடங்களில் அந்தப் பிரிவைத் தொடங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தற்போது மருத்துவச் சிறப்புப் பணிகள் பெரும்பாலும் நகரங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் மட்டுந்தான் இருக்கின்றன. இந்தச் சிறப்புப் பணிகளைக் கிராமங்களுக்கும் அளிக்க வேண்டும்; மாவட்ட, வட்ட மருத்துவமனைகளில் பல் மருத்துவம் போன்ற சிறப்புப் பிரிவுகளைத் தொடங்க அரசு திட்டமிட்டிருக்கிறது; அப்படிப்பட்ட திட்டத்தின் அடிப்படையில்தான் 108 வட்ட மருத்துவமனைகளில் இன்றைக்கு 66 வட்ட மருத்துவமனைகளில் பல் நோய் பிரிவு துவங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 66 வட்ட மருத்துவமனைகளில் பல்நோய்க்கான பிரிவு உருவாக்கப் பட்டிருக்கிறது என்று மகிழ்ச்சியோடு அறிவித்தார்கள். அந்த 66ல் மாயூரமும் ஒன்று. ஆனால், அதற்குத் தேவையான இன்ஸ்ட்ருமென்ட்ஸ்—கருவிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? பல் நோய் சிகிச்சைக்குத் தேவையான இன்ஸ்ட்ருமென்ட்சை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த வட்ட மருத்துவமனைகளில் அந்தந்தப் பிரிவுகள் துவங்கப் படுகிற நேரத்தில் அதற்குத் தேவையான கருவிகள் வாங்கித் தரப்படுகின்றன. அவைகளை வாங்கித் தந்த பிறகு தான் அந்தப் பிரிவுகள் துவங்கப்படுகின்றன.

1979 பிப்ரவரி 13]

ஆனால் மாயூரத்திலே அத்தகைய கருவிகள் இல்லை என்ற பிரச்சினையை இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றி எந்தவித அறிவிப்பும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. முறையாக அதுபற்றித் தெரிவித்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : ஏற்கனவே அமைச்சர் அவர்கள் அறிவிக்கும்பொழுது 66 வட்டங்களிலே ஆரம்பித்திருப்பதாகச் சொன்னார்கள். இன்னும் ஆரம்பிக்கப் படாமல் பல இடங்கள் இருக்கின்றன. அவைகளில் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

கால்நடைத் தீவனங்களில் கலப்படத் தடுப்பு.

*வினா எண். 37— திரு. ரெ. வி. சவுந்திரராசன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் தீவனங்களில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

(ஆ) இது குறித்து கடந்த ஆண்டில் நடவடிக்கைகளுக்கு உள்ளானவர்கள் எத்தனை பேர்கள் ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) கால்நடைத் தீவனம் மற்றும் கோழித் தீவனங்களில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுக்க சட்டம் ஒன்று இயற்றும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன : தலைவர் அவர்களே, மனிதர்கள் சாப்பிடும் உணவிலே கலப்படம் செய்தால் அவைகளைக் கண்டு பிடிப்பதற்கு அடல்ட்ரேஷன் அனலிடிகல் சென்டர்கள் இருக்கின்றன. இந்த கால்நடைகளுக்கான உணவிலும், புண்ணாக்கிலும் கலப்படம் நடக்கிறது, எப்படி எப்படி தீவனங்களில் கலப்படம் செய்கிறார்கள் என்பது கால்நடைகளை வளர்ப்பவர்களுக்குத்தான் தெரியும். ஆகவே, தீவனங்களிலே கலப்படம் செய்வதைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்கக் கூடிய முறையிலே மாவட்டத்திற்கு ஒரு பரிசோதனை சென்டர் ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?